**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI</u>**

**CC No.48/2022 Date: 08-01-2024**

**<u>அ.சா.1 – காயத்ரி, த/பெ.சரவணன்,</u>**

**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை).**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

1) 1ம் எதிரி எனக்கு பெரியப்பா முறை என்றால் சரிதான். 2ம் எதிரி எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக தான் பிரச்சனை என்றால் சரிதான். எதிரிகளுக்கு எதிராக சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.98/2018 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபிறகு எங்களுக்குள் அடிக்கடி வாய்தகராறு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் எங்கள் இருவருக்கும் சமரச பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரிதான்.

2) எங்கள் வீட்டிற்கும், எதிரிகளின் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 200 – 300 மீட்டர் துாரம் இருக்கும். 2ம் எதிரி M.E பட்டதாரி என்றால் சரிதான். எனது தந்தை ஆளுங்கட்சியில் மாவட்ட பொறுப்பில் உள்ளார் என்றால் சரிதான். எனது தாய்மாமன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளார் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே வீடுகள் இல்லை என்றால் சரியல்ல, ஒரு வீடு உள்ளது. சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் நானும், அ.சா.2ம் தான் இருந்தோம் என்றால் சரியல்ல, எதிரிகள் எங்களை திட்டிகொண்டிருக்கும்போது எனது பாட்டி கோவிந்தம்மாள் வந்துவிட்டார். நாங்கள் ஆடு மாடுகள் வளர்த்து வருகிறோமா என்றால் வளர்க்கவில்லை.

3) சம்பவ இடம் பட்டா நிலம் என்றால் சரிதான். கட்டையால் தாக்கியதாக தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கட்டை என்பது சற்று தடிமனாகவும், கோல் என்பது மெலிதாகவும் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் அரை மணிநேரத்திற்கு மேல் நடந்தது. எனக்கு சம்பவத்தின்போது ரத்த காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை, வீக்கம் மட்டும் தான் ஏற்பட்டிருந்தது. 2ம் எதிரி என்னை வலது பக்க தோள்பட்டையில் கோலால் அடித்தும், அதனை தடுகக வந்த எனது தங்கை அம்சவள்ளியை தலைமுடியை பிடித்து கீழே தள்ளினார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4) இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், எங்களது அரசியல் செல்வாக்கையும், எங்கள் உறவினர் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக இருப்பதை பயன்படுத்தியும், தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

Witness (Sd)-Gayathri

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI</u>**

**CC No.48/2022 Date: 08-01-2024**

**<u>அ.சா.2 – அம்சவள்ளி, த/பெ.சரவணன்,</u>**

**(சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை).**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

1) 1 ம் எதிரி எனக்கு பெரியப்பா முறை என்றால் சரிதான். 2 ம் எதிரி எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக தான் பிரச்சனை என்றால் சரிதான். எதிரிகளுக்கு எதிராக சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.98/2018 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

2) எங்கள் வீட்டிற்கும், எதிரிகளின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கி-மீ தூரத்திற்குள் இருக்கும். சம்பவ இடம் பட்டா நிலம் என்றால் சரிதான். சம்பவ இடம் இன்னும் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் நானும், அ.சா.1 ம் தான் இருந்தோம் என்றால் சரியல்ல, எதிரிகள் எங்களை அடிக்க துவங்கியபோது அப்பா, அம்மா, எனது பாட்டி கோவிந்தம்மாள் மற்றும் அருகில் இருப்பவர்களும் வந்துவிட்டனர். இந்த விவரத்தினை நான் போலிசார் விசாரணையில்சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் விசாரித்தனர்.

3) காவல் நிலையத்தில் யார் யாரை விசாரித்தனர் என்றால் என்னையும், அ.சா.1 ஐயும் விசாரித்தனர். எனது பெற்றோர்களை எப்போது விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது நேரம் என்ன இருக்கும் என்றால் ஞாபகமில்லை. போலிசார் விசாரணையில் 1 ம் எதிரி என் தலைமுடியை பிடித்து கீழே தள்ளினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், நெஞ்சில் உதைத்ததாகவும் சொல்லியுள்ளேன். எனது தந்தை ஆளுங்கட்சியில் பொறுப்பில் உள்ளார் என்றால் சரிதான். நான் ஆளுங்கட்சியில் மாவட்ட பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் கட்டையால் அடித்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாய்மாமன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளார் என்றால் சரிதான்.

4) இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், எங்களது அரசியல் செல்வாக்கையும், எங்கள் உறவினர் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக இருப்பதை பயன்படுத்தியும், தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

Witness (Sd)-Amsavalli

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.